**மாத்தறை பல்கலைக்கழகக் கல்லூரி – 2015**

---

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் மாத்தறை பல்கலைக்கழக் கல்லூரிக்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்கத் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு மற்றும் 2014 ஒக்டோபர் 03 ஆந் திகதிய 1882/51 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 49(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 ஸ்தாபித்தல்

2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 5(உ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவினது (1) ஆம் உப பிரிவின் கீழ் 2014 ஒக்டோபர் 1 முதல் அமுலுக்கு வரும் பொருட்டு தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் சபையால் தயாரிக்கப்பட்ட 2014 இன் 1 ஆம் இலக்கத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகக் கல்லூரிச் சட்டவாக்கத்தின் கீழ் அதன் இணைந்த நிறுவகமாக மாத்தறை பல்கலைக்கழகக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமைகள் 5, 6 மற்றும் 7 ஆம் மட்டத்திலும் அதற்குச் சமமான மட்டத்திலுமான தொழில்நுட்பக் கற்கை நெறிகளைச் செயற்படுத்துவது பிரதான நோக்கமாகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, மாத்தறை பல்கலைக்கழக கல்லூரியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மாத்தறை பிரதேச செயலாளரால் 2013 நவம்பர் 27 ஆந் திகதியன்று கையளிக்கப்பட்ட 0.5854 ஹெக்டெயர் காணி மற்றும் நிறுவகத்தால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத் தொகுதி என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடப்பவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைக் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 751 | 06 கற்கைப் பிரிவுகளுக்காக பெறப்பட்ட ரூபா 139,607,232 கிரயமுடைய 430 வகைப் பொருட்கள் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 756 | நிறுவனத்தின் அல்லது கற்கைப் பிரிவுகளில் மீளாய்வாண்டிற்கான வருடாந்தப் பொருட் கணிப்பு மேற்கொள்ளப்பட வில்லை. |
| (ஆ) திறைசேரிச் சுற்றறிக்கை | |
| (i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறான ரூபா 172,742,464 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் சம்பந்தமாக முறையான பிரகாரம் சொத்துப் பிரிவுகளின்படி நிலையான |

| | | |
|---|---|---|
| | | சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |
| (ii) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/2 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறு ரூபா 8,667,275 கிரயமுடைய கணனிகள் மற்றும் மென் பொருள் சம்பந்தமான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

பல்கலைக்கழகக் கல்லூரியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பமாகி இருந்ததுடன். சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கல்லூரியின் நிதி விளைவுகள் ரூபா 1,054,346 பற்றாக்குறையை ஏற்படுத்தியிருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 07 நோக்கங்கள் இனங்காணப்பட்டிருந்தன. அவற்றைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

(i) தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி மற்றும் தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மாணவர்களின் முன்னேற்ற அபிவிருத்திக்கு உதவியளித்தல், கைத்தொழில் பயிற்சி பெறுவோருக்கு கல்விப் பயிற்சி அளித்தல் மற்றும் பயிற்சிக்கான பாடத்திட்டத்தை மேம்படுத்துவதற்கு உதவியளித்தல்.

(ii) மத்திய மட்டத்தில் உள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் தேசிய தொழில்சார் தேர்ச்சியை அபிவிருத்தி செய்துகொள்ளுதற்பொருட்டும் தகைமைகளைப் பெறுதல் தொடர்பாகவும் கல்விக் கற்கை நெறிகளை வழங்குதல்.

(iii) பெரியளவிலான தொழில்சார் முன்னேற்றம் தொடர்பான தொழில்சார் கற்கை நெறிகளை வழங்குதல்

(iv) நிர்மாண வேலைகள், உற்பத்தி மற்றும் சேவைப் பிரிவு சம்பந்தமாக கல்லூரி உள்ளடங்கலாக மக்களுக்கு விரிவான சேவையை வழங்குதல்.

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 நவம்பர் 20 ஆந் திகதியன்று நிறுவனம் உருவாக்கப்பட்டிருந்தபோதும், 2016 ஜுன் 15 வரை நிறுவகத்தின் தொலை நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கம் யாது என நிச்சயித்திருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் 07 கற்கை நெறிகளுக்குப் பதிவு செய்திருந்த 123 மாணாக்கரில் 24 பேர் கற்கை நெறிகளிலிருந்து நீங்கியமை அவதானிக்கப்பட்டது. எனினும், அந்நிலைமையைக் குறைத்துக்கொள்வதற்கான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதனை அமுல்படுத்துவதற்கு கல்லூரி கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) கல்லூரியின் பல்வேறு பிரிவுகளுக்குமான பயிற்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தபோதும், போதியளவு கட்டிட வசதி இன்மையால் அவற்றை அமுல்படுத்த முடியாதிருந்தது.

(ஈ) ஒவ்வொரு கற்கை நெறிக்கும் ஆகக் கூடியது 30 மாணாக்கரே சேர்த்துக்கொள்ளப்பட முடியுமாயினும், 9 கற்கை நெறிகளுக்கு அந்த உயர் எண்ணிக்கை நிறைவு பெறும் விதத்தில் மாணாக்கர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்விசார் பதவியணியினருக்கெனப் பிறிதொரு வரவு இடாப்பு பேணப்பட்டிருந்ததுடன் 2015 ஒக்டோபர் 01 முதல் 2016 மே 01 வரை அவர்கள் நாளாந்தம் தமது வருகையைக் குறிக்கும் நேரத்தைக் குறிப்பிட்டிருந்தபோதும், வெளிச் செல்லும் நேரத்தைக் குறிப்பிடாது இருந்தனர். அதற்கமைய, அவர்கள் கடமையை நிறைவேற்றிய காலத்தை உறுதி செய்து கொள்ளுதல் கணக்காய்வின்போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஆ) வெளிவாரி விரிவுரையாளர்கள் 06 பேர் 2016 ஜனவரி முதல் மே வரையும் வருவதையும் செல்வதையும் குறிக்கும் நேரங்களைப் பதிவு செய்யாதிருந்தனர். அதற்கமைய, அவர்கள் ஆற்றிய கடமையை உறுதி செய்ய முடியாதிருந்தது.

(இ) 2015 பெப்ரவரி 15 ஆந் திகதியளவில் இரு வாகனங்கள், கட்டிடங்கள் மற்றும் துணைப் பாகங்கள் என்பன அமைச்சினால் கல்லூரிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனினும், 2016 ஜுன் 30 வரை அவற்றை நிறுவகத்திற்கு கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

குறித்த பணியினது அளவினை இனங்காணாதும் செலவினத்தை மதிப்பீடு செய்யாமலும் 08 சந்தர்ப்பங்களில் ரூபா 105,910 கூட்டுத்தொகையுடைய முற்பணம் வழங்கப்பட்டமை காரணமாக அம் முற்பணத்தில் 46 முதல் 78 சதவீதம் வரையிலானவற்றை மீண்டும் பணமாக தீர்த்து வைக்க வேண்டியேற்பட்டது.

### 4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீட்டு நிர்வாகம் தொடர்பான பயிற்சிப் பிரிவு 2015 மார்ச் 17 தொடக்கம் ஏப்ரல் 27 வரையான காலப்பகுதியின்போது பெற்றிருந்த ரூபா 480,538 கிரயமுடைய பொருட்கள் போதிய வசதியுடன் கூடிய ஆய்வுகூட வசதி இன்மையால் 2016 மே 30 ஆந் திகதியளவிலும் எதுவித உபயோகமும் இல்லாதிருந்தன.

(ஆ) சமையலறைப் பயிற்சிப் பிரிவு 2015 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 1,575,918 கிரயமுடைய பொருட்களுக்குத் தேவைப்படும் உதவிப் பொருட்கள் இல்லாமையால் அவை பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

### 4.5 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்லூரியின் கல்விசார் பதவியணியில் 14 விரிவுரையாளர் பதவிகள், 04 தற்காலிகக் காட்சிப்படுத்துபவர் பதவிகள் மற்றும் கல்விசாராப் பதவியணியில் 06 பதவிகள் என்பன வெற்றிடமாக இருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்வுக் குழு

2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பீஈடீ/55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கல்லூரியால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் தாபிக்கப்படவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தப் பாதீடு தயாரிக்கப்படவில்லை.

### 5.4 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையால் ஏற்படும் நேரடி மற்றும் மறைமுக சுகாதார சூழல் மற்றும் சமூகத் தாக்கங்களைக் குறைப்பதற்கு அரச நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றக் கூடியதாக இருந்தபோதும், அது தொடர்பாகப் போதிய கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) தற்போது தடை செய்யப்பட்டுள்ள 20 மைக்ரோனுக்குக் குறைந்த பொலித்தீன் பைகள் மற்றும் உணவு உறைகள் என்பவற்றை கல்லூரியில் தடை செய்தல், 20 மைக்ரோனுக்கு மேற்பட்ட பொலித்தீன் மற்றும் ஏனைய பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் என்பவற்றைக் கொண்டு வருதலைக் கட்டுப்படுத்தல் மற்றும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் என்பவற்றுக்குப் பதிலாக வேறு உறைகளைப் பயன்படுத்துவதற்குப் பதவியணியினரையும் மாணாக்கரையும் ஊக்குவித்தல் போன்ற சூழலுக்கு உகந்த நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதில் கல்லூரி கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் என்பவற்றைத் திறந்த வெளிகளில் எரிக்காது மீள் சுழற்சி நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கல்லூரியின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்பு |
| --- | --- | --- |
| (அ) | நிலையான சொத்துக்கள் | நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்படாமை, காணி மற்றும் கட்டிடத் தொகுதியின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டாமை மற்றும் சொத்துக்களைப் பயன்படுத்தாது வைத்திருந்தமை |
| (ஆ) | முற்பணம் | தேவைக்கு அதிகமாக முற்பணம் வழங்குதலும் அவற்றைத் தீர்த்து வைக்கத் தாமதம் ஆவதும். |
| (இ) | வாகனப் பயன்பாடு | வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமானங்களுக்கேற்ப நடவடிக்கை எடுக்காமை, சம்பவப் பதிவேடுகளைப் பேணாமை, நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தச் செயலாற்றல் பொழிப்பு என்பவற்றைப் பூர்த்தி செய்து அவற்றைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்காமை. |
| (ஈ) | களஞ்சியக் கட்டுப்பாடு | பொருப் பதிவேட்டை நாளதுவரையாக்காமை மற்றும் வருடாந்தப் பொருட் கணிப்பை மேற்கொள்ளாமை |
| (உ) | பதவியணியினர் நிர்வாகம் | கல்விசார் மற்றும் கல்விசாராப் பதவியணியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பாமை மற்றும் வரவு இடாப்பைப் பராமரிக்காமை. |